TAMIL | தமிழ்

AUSTRALIAN COMMISSION
ON SAFETY AND QUALITY IN HEALTH CARE

# சுகாதாரத்தைப் பற்றிய நல்ல தகவல்களை இணையம் மூலமாகக் கண்டறிவது எப்படி

## சேவை-நுகர்வோருக்கான தகவல்கள்

ஜூன் 2022



## சுகாதாரத்தைப் பற்றிய நல்ல தகவல்கள் ஏன் முக்கியமானவையாகின்றன?

அறிவார்ந்த முடிவுகளை மேற்கொள்ள சுகாதாரத்தைப் பற்றிய நல்ல தகவல்கள் உங்களுக்கு உதவக்கூடும். தவறான தகவல்களைச் சார்ந்திருப்பதென்பது உங்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலையை ஏற்படுத்தக்கூடும், அத்துடன் உங்களுடைய உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடும்.

சுகாதாரத்தைப் பற்றிய ஏராளமான தகவல்கள் இணையத்தில் உள்ளன, மற்றும் எந்தத் தகவல்களை நீங்கள் சார்ந்திருக்கலாம், அல்லது யாரை நீங்கள் நம்பலாம் என்பதைத் தெரிந்துகொள்வது எல்லா வேளைகளிலும் எளிதானதல்ல.

# சுகாதாரத்தைப் பற்றிய நல்ல தகவல்களை இணையம் மூலமாகக் கண்டறிவதற்கான முக்கிய யோசனைக் குறிப்புகள்

சுகாதாரத்தைப் பற்றிய நல்ல தகவல்களை இணையம் மூலமாகக் கண்டறிவதற்கும், அந்தத் தகவல்கள் உங்களுக்கு ஏற்றவைதானா என்பதை மதிப்பிடுவதற்கும் உங்களால் செய்ய இயலுமான விடயங்கள் உள்ளன.



**» உங்களுக்கு ஏற்ற தகவல்கள் இருக்கின்றனவா என்று பாருங்கள்**

- உங்களுடைய கேள்விகளுக்கான பதில்களை அந்தத் தகவல்கள் தருகின்றனவா?
- அந்தத் தகவல்கள் ஆஸ்திரேலிய நாட்டுத் தகவல்களா?
- உங்களுடைய உள்ளூர்ப்-பகுதியில் கிடைக்கும் சேவைகளுடன் அவை உங்களைத் தொடர்புபடுத்துகின்றனவா?

**» நம்பத் தகுந்த மூலவளங்கள் எவை என்று பாருங்கள்**

- ஒரு வல்லுநரால், அல்லது நிபுணத்துவம் மிக்கதொரு அமைப்பினால் அந்தத் தகவல்கள் எழுதப்பட்டுள்ளனவா?
- அந்தத் தகவல்களுக்கான ஆதாரங்கள் உள்ளனவா?
- அவை தற்போதையத் தகவல்களா, மற்றும் அவை நடப்பு-நாள் வரைக்கும் சரியானவையா?

**» உங்களுக்கு விளங்கக்கூடிய தகவல்கள் கிடைக்கின்றனவா என்று பாருங்கள்**

- அத் தகவல்கள் எளிய வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனவா?
- சிரமான கருத்துகளுக்கான விளக்கங்களை அவை அளிக்கின்றனவா?

**» நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதற்கான அறிகுறிகள் ஏதும் உள்ளனவா என்று பாருங்கள்**

- அந்தத் தகவல்கள் உங்களிடம் எதையும் விற்பனை செய்ய முயற்சிக்கின்றனவா?
- அச்சம் அல்லது பதட்ட உணர்வு எதையும் அந்தத் தகவல்கள் உங்களுக்கு ஏற்படுத்துகின்றனவா?
- ஒரே ஒரு விருப்பத் தெரிவை மட்டும்தான் அந்தத் தகவல்கள் உங்களுக்கு அளிக்கின்றனவா?
- ஒரே ஒரு நபருடைய அனுபவத்தை மட்டுமே அத் தகவல்கள் அடிப்படையாகக் கொண்டுள்ளனவா?

**» நீங்கள் மற்றவர்களுடன் இணையம் மூலமாகத் தொடர்புகொள்கிறீர்கள் என்றால், அவர்களுடைய அனுபவங்கள் வேறு வகையானவையாக இருக்கலாம் என்பதையும், அவை உங்களுடைய அனுபவங்களிலிருந்து வித்தியாசமானவையாக இருக்கலாம் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்**

**» நீங்கள் காணும் தகவல்கள் சரியானவைதானா என்று உங்களுடைய சுகாதாரப் பராமரிப்புத் தொழிலரைக் கேட்டுச் சரிபார்த்துக்கொள்ளுங்கள்**

**» இணையம் மூலமாக சுகாதாரத் தகவல்களைக் கண்டறிய, அல்லது அவற்றின் தரத்தைத் தீர்மானிக்க உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உதவி வேண்டுமெனக் கேளுங்கள்**

## யோசனைக் குறிப்பு 1: உங்களுக்கு ஏற்ற தகவல்கள் இருக்கின்றனவா என்று பாருங்கள்

உங்களுடைய தேடலை மேற்கொள்வதற்கு முன்பாக, எந்தக் கேள்விகளுக்கான பதில்கள் உங்களுக்கு வேண்டும் என்பதைப் பற்றி இயலுமான வரை தெளிவாக இருங்கள். உங்களுக்குப் பொருத்தமான தகவல்களைக் கண்டறிவதில் இது உங்களுக்கு உதவியாக இருக்கும். உங்களுக்குத் தேவைப்படும் தகவல்கள் என்ன என்பதைத் தெரிந்துகொள்வது அவற்றை எங்கு தேடவேண்டும் என்பதை முடிவு செய்வதில் உங்களுக்கு உதவியாக இருக்கும். உங்களுக்குத் தேவையான விடயங்களில் சிறப்புத்துவம் பெற்ற அமைப்புகள் யாவை என்பதைப் பற்றியும், நீங்கள் தேடும் தகவல்கள் நீங்கள் வசிக்கும் பகுதிக்குப் பொருத்தமானவையா என்பதைப் பற்றியும் யோசியுங்கள்.





## யோசனைக் குறிப்பு 2: நம்பத் தகுந்த மூலவளங்கள் எவை என்று பாருங்கள்

மருத்துவமனைகள், குறிப்பிட்ட நோய்-நிலைகளுக்கான அமைப்புகள், மாநில மற்றும் எல்லைப்-பிரதேச சுகாதார சேவைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் 'சுகாதார திணைக்களம்' (Department of Health) போன்ற ஆஸ்திரேலிய அரச முகமைகள் ஆகியவற்றின் வலைத்தலங்கள் நீங்கள் நம்பத் தகுந்த மூலவளங்களில் உள்ளடங்கும். கிடைப்பவற்றில் மிகச் சிறந்த ஆஸ்திரேலிய நாட்டு அறிவுரைகள் உங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்பது இந்த அமைப்புகளது விருப்பமாகும், அத்துடன் தகவல்கள் சரியானவைதானா என்று சோதிப்பதற்கான செயல்பாட்டு முறைகளையும் இந்த அமைப்புகள் கொண்டுள்ளன. படைப்பாளர் யார் என்பதை, அல்லது வெளியீட்டாளர் யார் என்பதை நமபத் தகுந்த மூலவளங்கள் தெளிவாகக் காண்பிக்கும்.



## யோசனைக் குறிப்பு 3: உங்களுக்கு விளங்கக்கூடிய தகவல்கள் கிடைக்கின்றனவா என்று பாருங்கள்

நல்ல சுகதாரத் தகவல்கள் என்பன தெளிவானவையாகவும், விளங்கிகொள்ள எளிதானவையாகவும் இருக்கும். சிரமான கருத்துகள் அல்லது தொழில்-நுட்பத் தகவல்களை உங்களுக்கு புரியக்கூடிய விதத்தில் அவை விளக்கிச் சொல்லும். மேலதிகத் தகவல்கள் அல்லது ஆதரவுதவிகளை நீங்கள் எங்கிருந்து பெறலாம் என்பதையும் இவை சுட்டிக் காண்பிக்கலாம்.

---




## யோசனைக் குறிப்பு 4: நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதற்கான அறிகுறிகள் ஏதும் உள்ளனவா என்று பாருங்கள்

உங்களுடைய உடல் நலம் மற்றும் பராமரிப்பைப் பற்றி அறிவார்ந்த தெரிவுகளை மேற்கொள்வதில் நல்ல சுகாதாரத் தகவல்கள் உங்களுக்கு உதவியாக இருக்கவேண்டும். குறிப்பிட்ட ஒரு உற்பத்திப்பொருள் அல்லது சேவையை முன்னெடுத்து வைக்கும் தகவல்கள், உங்களைப் பற்றிய விபரங்களைத் தருமாறு கேட்கும் தகவல்கள், அல்லது உங்களுக்கு அச்சத்தை அல்லது பதட்டத்தை உண்டாக்கும் தகவல்கள் ஆகியன தவறானவையாக இருக்கலாம் (இதை 'misinformation' என்று சொல்வர்), அல்லது உங்களைத் தவறான பாதையில் இட்டுச்செல்லும் நோக்கத்திற்காகவே உருவாக்கப்பட்டவையாக அவை இருக்கலாம் (இதை 'disinformation' என்று சொல்வர்). உங்களுக்கு ஒரே ஒரு தெரிவை மட்டுமே கொடுக்கும் தகவல்களையோ, ஒரு நபருடைய அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட அறிவுரையையோ நீங்கள் சார்ந்திருக்கக் கூடாது.

## யோசனைக் குறிப்பு 5: நீங்கள் மற்றவர்களுடன் இணையம் மூலமாகத் தொடர்புகொள்கிறீர்கள் என்றால், அவர்களுடைய அனுபவங்கள் வேறு வகையானவையாக இருக்கலாம் என்பதையும், அவை உங்களுடைய அனுபவங்களிலிருந்து வித்தியாசமானவையாக இருக்கலாம் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்

**ஒரே மாதிரியான உடல்நலப் பிரச்சினை உள்ள மற்றவர்களுடன் தொடர்புகொள்வதன் மூலம் உங்களால் ஆதரவுதவி மற்றும் தகவல்களைப் பெற இயலுமாகலாம். இணையம் மூலமாக நீங்கள் செவிமடுக்கும் அல்லது வாசிக்கும் ஒருவரது சொந்த அனுபவத்தைப் பற்றிய தகவல்கள் பெரும்பாலானோருக்கு ஏற்படும் விடயங்களைப் போன்றாவையாக அல்லாமல் மாறுபட்டவையாக இருக்கலாம் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.**






## யோசனைக் குறிப்பு 6: நீங்கள் காணும் தகவல்கள் சரியானவைதானா என்று உங்களுடைய சுகாதாரப் பராமரிப்புத் தொழிலரைக் கேட்டுச் சரிபார்த்துக்கொள்ளுங்கள்

உங்களுடைய உடல்நலத்தைப் பற்றிய தகவல்களைப் பற்றியும் உங்களுக்கேற்ற விருப்பத் தெரிவுகள் யாவை என்பதைப் பற்றியும் உங்களுடைய மருத்துவருடன் நீங்கள் பேசவேண்டும், கேள்விகள் கேட்கவேண்டும் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும் என்பது முக்கியம். உங்கள் மருத்துவரிடம் உடல்நலத்தைப் பற்றிய தகவல்களைப் பற்றிப் பேசுவது, கேள்விகளைக் கேட்பது மற்றும் உங்களுக்கு எந்த விருப்பத்தேர்வுகள் சரியானது என்பதைப் பற்றி ஆராய்வது முக்கியம். உங்கள் உடல்நலக் குழுவுடன் உங்கள் பராமரிப்பு பற்றிய முடிவுகளைப் பகிர்ந்து கொள்ளவும், அறிவார்ந்த தேர்வுகளை மேற்கொள்வதற்குத் தேவையான தகவலைப் பெறவும் உங்களுக்கு உரிமைகளுண்டு.

# யோசனைக் குறிப்பு 7: இணையம் மூலமாக சுகாதாரத் தகவல்களைக் கண்டறிய, அல்லது அவற்றின் தரத்தை மதிப்பிடுவதற்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உதவி வேண்டுமெனக் கேளுங்கள்

இணையம் மூலமாய்க் கிடைக்கும் தகவல்கள் உங்களுக்கு ஏற்றவையா என்று தீர்மானிப்பது சிரமமாக இருக்கலாம். இணையம் மூலமாக சுகாதாரத்தைப் பற்றிய நல்ல தகவல்களைக் கண்டறிவதற்கான உதவியை நீங்கள் நாடலாம். உங்களுடைய நம்பிக்கைக்குரிய குடும்ப அங்கத்தவர் அல்லது நண்பர் ஒருவர், சுகாதாரத் தொழிலர் ஒருவர், சுகாதாரப் பரிந்துரையாளர் ஒருவர், நூலகர் ஒருவர் அல்லது உள்ளூர்ப்-பகுதி சேவை நுகர்வோர் அமைப்பு ஒன்றினால் உங்களுக்கு உதவ இயலலாம்.





# ஆஸ்திரேலியாவில் இணையம் மூலமாக சுகாதாரத்தைப் பற்றிய நல்ல தகவல்களைக் கண்டறிவதற்கான இடங்கள்

இணைய வழியில் சுகாதாரத்தைப் பற்றிய நல்ல தகவல்களைக் கண்டறிவதற்கான இடங்களுக்கான உதாரணங்கள் சில மட்டும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

## குறிப்பிட்ட நோய்-நிலைகளுக்கான அமைப்புகள்

### Arthritis Australia

மூட்டுவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கான ஆதரவுதவிகளையும், தகவல்களையும் இது அளிக்கிறது. மூட்டுவாதத்தைப் பற்றிய தகவல்கள், சிகிச்சைக்கான தெரிவுகள், புதிய ஆராய்ச்சிகள் மற்றும் ஆதரவுதவிகள் ஆகியவற்றை எங்கு கண்டறியலாம் என்பதைப் பற்றிய தகவல்களை இந்த வலைத்தலம் கொண்டிருக்கும்.

### Beyond Blue

மனநலம் மற்றும் பொதுநலத்தினை இது முன்னெடுத்து வைக்கிறது, அத்துடன் மனநலப் பிரச்சினைகள் உள்ளவர்களுக்கும், அவர்களது அன்பிற்குரியவர்களுக்கும் ஆதரவுதவிகளை அளிக்கிறது. மனநோய், தற்கொலைத் தடுப்பு ஆகியவற்றைப் பற்றிய தகவல்களையும், ஆதரவுதவிகளை எங்கிருந்து பெறலாம் என்பதைப் பற்றிய தகவல்களையும் இந்த வலைத்தலத்தில் காணலாம்.

### Cancer Council Australia

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தகவல்களை இது அளிக்கிறது, மற்றும் ஆராய்ச்சிகளையும் நடாத்துகிறது. புற்றுநோய் மற்றும் சிகிச்சைகளைப் பற்றிய தகவல்கள் இந்த வலைத்தலத்தில் உள்ளன.

### Consumers Health Forum of Australia

ஆஸ்திரேலிய சுகாதாரப் பராமரிப்பு சேவை நுகர்வோர்களது நலன்களைச் சார்புபடுத்தும் தலையாய தேசிய மட்ட அமைப்பாகும் இது. தகவல்கள் மற்றும் ஆதரவுதவிகளை அளிக்கும் சேவை நுகர்வோர் அமைப்புகள் மற்றும் சமூக சுகாதார அமைப்புகளின் பட்டியல் ஒன்றை இந்த வலைத்தலம் கொண்டுள்ளது.

### Council on Intellectual Disabilities

அறிவுசார் இயலாமையுடையோர் அனைவரும் மதிக்கப்படும், அத்துடன் மற்றவர்களுக்கிருக்கும் அதே வாய்ப்புகள் அவர்களுக்குக் கிடைக்கும் சமூகம் ஒன்றினை இது முன்னெடுத்து வைக்கிறது. உடல் நலம் மற்றும் **National Disability Insurance Scheme** திட்டம் உள்ளடங்க, அறிவுசார் இயலாமையுடையோருக்கும், அவர்களுடைய அன்பிற்குரியவர்களுக்குமான முக்கிய விடயங்களைப் பற்றிய தகவல்கள் இவ் வலைத்தலத்தில் உள்ளன.

### MyBackPain.org.au

**University of Queensland, Arthritis Australia** மற்றும் **Cochrane Back** மற்றும் **Neck Group** ஆகிய அமைப்புகளுக்கு இடையேயான ஒரு பங்காண்மையாகும் இது. முதுகு நோவு உள்ளவர்களுக்கும் அவர்களுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் இது ஆதரவுதவியளிக்கிறது. முதுகு நோவை அடையாளம் காண்பது மற்றும் அதைக் கட்டுப்படுத்துவது ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை இந்த வலைத்தலம் கொண்டுள்ளது.

### National Asthma Council Australia

ஆஸ்துமா உள்ளவர்களுக்கும், அதைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்குமான ஆதரவுதவிகளை அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆஸ்துமா நோயறிவுச் சோதனை மற்றும் அதற்கான சிகிச்சை ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை இந்த வலைத்தலம் கொண்டுள்ளது. கூடுதல் ஆதரவுதவி மற்றும் மூலவளங்களுக்கான இணைப்புகளும் இதில் உள்ளன.

### The Heart Foundation

இதய-நோயைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரித்து இதய நோயைத் தடுப்பதையும், சமுகத்தினர் இதய-ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கான ஆதரவுதவிகளை அளிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இதய-இரத்தநாளம் சம்பந்தப்பட்ட நோயுடன் வாழ்ந்துவருபவர்கள் அல்லது இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தகவல்களை இந்த வலைத்தலம் அளிக்கிறது.

## ஆஸ்திரேலிய அரசாங்க முகமைகள்

### Cancer Australia

புற்று நோயின் தாக்கத்தினைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது, அத்துடன் புற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான பலன்கள் கிடைப்பதற்கு ஆதரவுதவியாக இருக்கிறது. புற்று நோய்க் கட்டுப்பாடு, சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிகள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை இந்த வலைத்தலம் கொண்டுள்ளது.

### Department of Health

ஆஸ்திரேலியர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்வதையும், நேர்முகமான முறையில் அவர்கள் மூப்படைவதையும் இது முன்னெடுத்து வைக்கிறது. சுகாதாரத்தைப் பற்றிய வெவ்வேறு விடயங்கள், சுகாதாரத் திட்டங்கள் மற்றும் சுகாதாரச் செய்திகள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்கள் இவ் வலைத்தலத்தில் உள்ளன.

### Healthdirect

வெவ்வேறு சுகாதார விடயங்கள் மற்றும் மருந்துகளைப் பற்றிய தகவல்களை உள்ளடக்கும் உடல் நலம் குறித்த இலவச அறிவுரைகளை ஆஸ்திரேலியர்களுக்கு இது அளிக்கிறது. நோயாளி ஒருவருக்கு இருக்கும் அறிகுறிகளைப் பற்றிய தகவல்கள் இந்த வலைத்தலத்தில் உள்ளன, அத்துடன் உங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் சுகாதார சேவை ஒன்றைக் கண்டறிவதற்கான தேடலை மேற்கொள்ளவும் இது உங்களுக்கு உதவும்.

### NPS Medicinewise

பாதுகாப்பான மற்றும் புத்திசாலித்தனமான மருந்துப் பயன்பாட்டின் மூலம் ஆஸ்திரேலியர்களது உடல் நலத்தினை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும். மருத்துவரால் பரிந்துரைக்கப்படும் மருந்துகள், மருந்துச்சீட்டு இல்லாமல் வாங்கக் கூடிய மருந்துகள் மற்றும் குறை-நிரப்பு மருந்துகள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்கள் இந்த வலைத்தலத்தில் உள்ளன.

### raisingchildren.net.au

குழந்தைகளது பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான ஆஸ்திரேலியப் பிள்ளை-வளர்ப்பைப் பற்றியதொரு வலைத்தலமாகும் இது. குழந்தைகளின் வளர்ச்சி, அவர்களுடைய தொடர்பாடல் திறன், சுகாதாரம் மற்றும் நடத்தைப்-பாங்கு ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை இந்த வலைத்தலம் கொண்டுள்ளது.

## சமூக மொழிகளிலான மொழிபெயர்ப்புகள்

### Health Translations

கலாசார ரீதியாகவும், மொழி ரீதியாகவும் பரந்துபட்ட பின்புலங்களைக் கொண்ட மக்களது சுகாதாரம் மற்றும் பொதுநலத்திற்கு ஆதரவுதவியாக இருப்பது இதன் நோக்கம். 100-இற்கும் மேலான சமூக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வெவ்வேறு நோய்-நிலைகள் மற்றும் சிகிச்சைகளைப் பற்றிய தகவல்கள் இந்த வலைத்தலத்தில் உள்ளன.

## உங்களுடைய சுகாதாரப் பராமரிப்பு அணியினருடன் நீங்கள் இணைவாய்ச் செயலாற்றுவதற்கான உங்களுடைய சுகாதாரப் பராமரிப்பு உரிமைகள் மற்றும் யோசனைக் குறிப்புகளைப் பற்றிய தகவல்கள்

உங்களுக்கு உபயோகமாக இருக்கக்கூடிய சேவை நுகர்வோருக்கான சில மூலவளங்களை நாங்கள் வெளியிட்டுள்ளோம்:

- **Australian Charter of Healthcare Rights:** சேவைகளை அணுகும் வசதி, பாதுகாப்பு, மதிப்பு–மரியாதை, பங்காண்மை, தகவல்கள், தகவல் பாதுகாப்பு மற்றும் பின்னூட்டல்களை அளித்தல் ஆகிய விடயங்கள் உள்ளடங்க, நீங்களோ, நீங்கள் பராமரித்துவரும் ஒருவரோ எதிர்பார்க்க இயலுமான உரிமைகளை இந்த ஆவணம் விளக்கிச் சொல்கிறது.
- **Top Tips for Safe Health Care:** உங்களுடைய சுகாதாரப் பராமரிப்பு சேவை மூலமாக ஆகச் சிறந்த பலன்களைப் பெற உங்களுக்கு உதவுவதற்கென இந்த ஆவணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- **Question Builder:** மருத்துவ சந்திப்புவேளை ஒன்றிற்குச் செல்லும் பொழுது நீங்கள் உங்களுடைய மருத்துவரைக் கேட்க விரும்பக்கூடிய கேள்விகளைப் பற்றி நீங்கள் யோசிக்கவும், உங்களுடைய மருத்துவர் உங்களைக் கேட்கக்கூடிய கேள்விகளுக்காக நீங்கள் ஆயத்தம் செய்யவும் உங்களுக்கு உதவுவதற்கானதொரு இலவச இணைய–வழிச் சாதனமாகும் இது.



மேலதிகத் தகவல்களுக்கு safetyandquality.gov.au/good-health-information எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.


AUSTRALIAN COMMISSION
ON SAFETY AND QUALITY IN HEALTH CARE

Level 5, 255 Elizabeth Street, Sydney NSW 2000
GPO Box 5480, Sydney NSW 2001

**தொலைபேசி:** (02) 9126 3600

@ACSQHC

safetyandquality.gov.au